சுகாதார அமைச்சு

சுதேச வைத்தியப் பிரிவு

ஆயுர்வேத வைத்திய சபை

வருடாந்த அறிக்கை - 2022



உள்ளடக்கம்

ஆயுர்வேத வைத்திய சபையின் தொலைநோக்கு மற்றும் செயற்பணி	**04**
இலக்குகள், ஆயுர்வேத வைத்திய சபையின் அறிமுகம், செயலாற்றுகை மற்றும் பொறுப்பு	**05**
ஆயுர்வேத வைத்திய சபையின் உறுப்பினர்கள் - 2022	**06**
ஆயுர்வேத வைத்திய சபையின் நிர்வாகக் கட்டமைப்பு	**07**
ஆயுர்வேத வைத்திய சபையின் செயற் திறன்	
நிதி ஏற்பாடு	**08**
கொள்கை வகுத்தமைத்தல் நுண்ணாய்வுகள் மற்றும் விசேட மருத்துவக் குழு	**09 - 10**
1961 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க ஆயுர்வேத சட்டத்தின் 55(1) மற்றும் 55(2) பிரிவுகளின் பிரகாரம் பாரம்பரிய ஆயுர்வேத வைத்தியர்களைப் பதிவு செய்தல்	**11 - 14**
அயுர்வேத வைத்திய சபையின் வலையமைப்பு, ஆயுர்வேத வைத்தியர்களின் பதிவினைப் புதுப்பித்தல், விசேட நிகழ்ச்சித் திட்டங்கள்	**15**
2022 ஆம் ஆண்டில் ஆயுர்வேத வைத்திய சபையினால் எடுக்கப்பட்ட மற்றும் கொண்டு வரப்பட்ட தீர்மானங்களுக்கு இணங்க நடைமுறைப்படுத்தப்பட்ட ஏனைய நடவடிக்கைகள்.	**16 - 17**
2022 ஆம் ஆண்டின் பொருட்டான நிதி செயற்திறன் கூற்று	**18 - 21**
2022 நிதி உள்ளவாறான கூற்று	**22 - 23**
2022 காசுப் பாய்ச்சல் கூற்று	**24 - 26**
2022 உரிமை மாற்றக் கூற்று	**27**
ஆயுர்வேத வைத்தியசபையின் 2022 மார்கழி 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்று தொடர்பாக 2018 ஆம் ஆண்டின் இலக்கம் 19 கொண்ட தேசிய காணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வு அறிக்கை	**28-35**
கூட்டுத்தாபன விபரங்கள்	**36**
நன்றி	**37**

தொலை நோக்கு

.ஆயுர்வேதம் னதரமான சுகாதார சேவைக்கா

பணிசெயற்

தொழில்சார் நெறிமுறை மூலமாக பொது மக்களுக்கு ஆகக் கூடிய சுகாதார சேவையை வழங்கும் அதே வேளையில் ஆயுர்வேதத் அபிவிருத்தி துறையின் பண்பு சார்ந்த பொருட்டுத் தேவைப்படும் சட்ட அடிப்படையைப் பாதுகாத்தல்

குறிக்கோள்

1961 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க ஆயுர்வேத சட்டத்தின் ஒழுங்கு விதிகளுக்கு அமைய ஆயுர்வேத துறையின் தரத்தை அபிவிருத்தி செய்வதற்கு வேண்டிய அறிவு, திறமை மற்றும் அனுபவம் என்பவற்றுடன் துறை சார்ந்தவர்களிற்கு சட்டபூர்வமான அதிகாரத்தை வழங்குதல் மற்றும் தொழில் கௌரவத்தை மற்றும் தொழிற் தரத்தைப் பாதுகாத்தல்.

இலக்குகள்:

- 1961 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க ஆயுர்வேத சட்டத்தின் வைத்திய சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தை அமூல்படுத்தல்
- ஆயுர்வேத துறையின் தொழில்சார் திறன்களை மேம்படுத்துவதற்கு தரம் / அளவுகோல்களை தயாரித்தல் மற்றும் நடாத்திக் கொண்டு செல்லுதல்.
- ஆயுர்வேதத்துறை தொழில்சார்ந்தவர்களின் நன்நடத்தை செயற்திறன் உள்ளதாக நடாத்துவதற்கு வேண்டிய ஒழுங்கு விதிகள் மற்றும் தரத்தை நடைமுறைப்படுத்தல்.
- ஆயுர்வேத துறையில் தொழில் சார்ந்த நன்நடத்தைகள் தீர்மானித்தல் மற்றும் நிர்வகித்தல்.
- ஆயுர்வேத வைத்திய சபையின் வளங்கள் மற்றும் வசதிகள் நாளது வரையாக்கம் செய்வதன் மூலமாக அதன் செயற் திறனை அபிவிருத்தி செய்தல்.

1961 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க ஆயுர்வேத சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட ஆயுர்வேத வைத்திய சபையின் அறிமுகமும் பொறுப்புகளும்

1927 ஆம் ஆண்டின் தேசிய அரசுப் பேரவை துணைச் சபை விதந்துரைப்பின் பேரில் 1928 இல் ஸ்தாபிக்கப்பட்ட சுதேச வைத்திய சபை இலங்கை ஆயுர்வேத வரலாற்றில் முதற் சட்ட முறை ஆட்சி உரிமை கொண்ட நிறுவனமானது, பின் 1935 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க லங்காயுர்வேத வைத்திய சாசன சபை கட்டளைச் சட்ட மூலம் அமைக்கப்பட்ட வைத்திய சபை 1941 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க சுதேச வைத்திய கட்டளைச் சட்டத்தின் (1945 இன் இலக்க 49 மற்றும் 1949 இன் 49 இலக்க ஊடாக திருத்தப்பட்ட) கீழ் மீள் நிரப்பப்பட்டது. தற்போது நடைமுறையில் உள்ள ஆயுர்வேத வைத்திய சபை 1961 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க ஆயுர்வேத சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட நியதிச்சட்ட நிறுவனமாகும்.

ஆயுர்வேத வைத்திய சபையின் பொறுப்புகள்

அ. இந்தச் சட்டத்தின் நோக்கத்தின் பொருட்டு ஆயுர்வேதத்தினைக் கற்பித்தலுக்காக ஏதாவது நிறுவனத்திற்கு அங்கீகாரம் வழங்க வேண்டுமா என்று அமைச்சருக்கு விதந்துரைப்பினைச் செய்தல்.

ஆ. ஆயுர்வேத மருத்துவர்களாக ஆட்களின் பெயர்களைப் பதிவு செய்தல்.

இ. ஆயுர்வேத மருந்துக் கலவையாளர்களாக ஆட்களின் பெயர்களைப் பதிவு செய்தல்.

ஈ. ஆயுர்வேத கவனிப்பாளராக ஆட்களின் பெயர்களைப் பதிவு செய்தல்.

உ. அத்தகைய பதிவுகளைப் இரத்துச் செய்தல் அல்லது இடை நிறுத்தி வைத்தல்

ஊ. 1. ஆயுர்வேத மருத்துவர்கள், ஆயுர்வேத மருந்துக் கலவையாளர், மற்றும் ஆயுர்வேத கவனிப்பாளர் போன்றவர்களின் தொழில்சார் நடத்தைகளை ஒழுங்கு படுத்தலும், கட்டுப்படுத்தலும் பொருட்டு.

2. இப் பிரிவில் உள்ள (ஆ) தொடக்கம் (உ) வரை குறிப்பீடு செய்யப்படும் ஏதாவது விடயங்கள் பொருட்டு சட்ட வாக்கங்களை வகுத்தமைத்தல்.



1961 ஆண்டின் 31 ஆம் இலக்க கீழ் ஸ்தாபிக்கப்பட்ட ஆயுர்வேத வைத்திய சபை

1961 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க ஆயுர்வேத சட்டம் மற்றும் 1977 ஆம் ஆண்டின் 07 இலக்கம் கொண்ட திருத்தத்திற்கு ஏற்ப ஆயுர்வேத வைத்திய சபையின் கீழ்காணும் உறுப்பினர்களை கொண்டுள்ளது.


1) ஆயுர்வேத ஆணையாளர் – (தலைவர்)
2) சுதேச வைத்திய நிறுவனத்தின் பணிப்பாளர் – (அதிகாரபூர்வமாக)
3) சுதேச வைத்திய நிறுவனத்தின் பேராசிரியர்களின் தேர்தெடுக்கப்பட்ட அங்கத்தவர்கள் இருவர்
4) அங்கீகரிக்கப்பட்ட ஒவ்வொரு ஆயுர்வேத கல்வி நிறுவனங்களில் பேராசிரியர்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒருவர்.
5) பதிவு செய்யப்பட்ட ஆயுர்வேத வைத்தியர்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட மூன்று அங்கத்தவர்கள் மற்றும்
6) அமைச்சரினால் நியமிக்கப்படும் அங்கத்தவர்கள் 10 பேரை தாண்டாதவாறு
    i. பதிவு செய்யப்படாத ஆயுர்வேத வைத்தியர்கள் அல்லாத நபர்களின் மூன்று பேருக்கு மேற்படாதவாறு இவ்பவாறு நியமிக்கப்படக் கூடாது.
    ii. அகில இலங்கை ஆயுர்வேத மாநாட்டினால் பெயரிடப்பட்ட பத்து பேர் குழுவில் மூன்று பேர் அவ்வாறு நியமிக்கப்படல் வேண்டும்.
    iii. அகில இலங்கை ஆயுர்வேத வைத்திய சங்க அங்கத்தவர்கள் அல்லாத பதிவு செய்யப்பட்ட ஆயுர்வேத வைத்தியர்களில் இருவர் அவ்வாறு நியமிக்கப்படல் வேண்டும்.

2022 ஆம் ஆண்டின் 21 வது வைத்திய சபையின் உறுப்பினர்கள்

1.	ஆயுர்வேதஆணையாளர்-	
	கலாநிதி எம்.டீ.ஜே.அபேகுணவர்தன	தலைவர்
2.	பணிப்பாளர், சுதேச வைத்திய நிறுவனம்	
	கலாநிதி திருமதி பிரியானி ஏ.பரணகம	உப தலைவர்
3.	வண.பெங்கமுவே நாளக தேரர்	உறுப்பினர்
4.	ம்திணைக்கள அபிவிருத்தி நிதி ,பணிப்பாளர்	
	கே.பி.ஆர்.பர்னாந்து .திரு	கண்கணிப்பாளர்
5.	வைத்தியர் ம.ஹே.நிமல் கருணாசிரி	உறுப்பினர்
6.	சிரேஷ்ட விரிவுரையாளர் வைத்தியர் எஸ்.எம்.எச்.சமரகோன்	உறுப்பினர்
7.	சிரேஷ்ட விரிவுரையாளர் வைத்தியர்	
	திருமதி எம்.யூ.இஸட்.என்.பர்சானா	உறுப்பினர்
8.	திரு.துஷார சம்பத் பெரேரா	உறுப்பினர்
9.	வைத்தியர் எச்.பசில் ரன்சித் பர்னாந்து	உறுப்பினர்
10.	வைத்தியர் ஏ.எம்.ஹீன்னிலமே	உறுப்பினர்
11.	வைத்தியர் திலின விக்கிரமசிங்க	உறப்பினர்
12.	வைத்தியர் சமரி வைத்தியரத்ன	உறுப்பினர்
13.	வைத்தியர் எம்.டீ.அசங்க ரன்ஜன (2022.07.12 வரை)	உறுப்பினர்
14.	வைத்தியர் பி.விஜேரத்ன	உறுப்பினர்
15.	எச்.என்.ஆர்.ஹெட்டிஆரச்சி	உறுப்பினர்
16.	வைத்தியர் பீ.டப்.டப்.திசாநாயக (2021.04.05 தொடக்கம்)	பதிவாளர்

இந்த ஆண்டில் 11 வைத்திய சபைக் கூட்டங்கள் நடைபெற்றுள்ளன.

ஆயுர்வேத வைத்திய சபையின் நிர்வாகக் கட்டமைப்பு



ஆயுர்வேத வைத்திய சபையின் செயற் திறன் - 2022

01. நிதி ஏற்பாடு

2022 ஆம் ஆண்டின் பொருட்டு ஆயுர்வேத வைத்திய சபைக்கு ரூபா ஏழு மில்லியன் இரு நூறாயிரம் (7,200,000/-) நிதி அரச கொடையாக பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது.

2022 ஆம் ஆண்டு காலப் பகுதியில் ஆயுர்வேத வைத்திய சபையிற்கு பல்வேறு பிரிவுகளினாலும் கிடைக்கப் பெற்ற வருமானம் ரூ.12,704,690.61 ஆகவும் மொத்த செலவினம் ரூ.16,608,652.16 ஆகவும் இருந்தது. 2022 ஆம் ஆண்டின் ஆயுர்வேத வைத்திய சபையின் செயற் திறன் குறித்த அறிக்கையொன்று வருமான செலவினக் கணக்கிலும் 2022.12.31 உள்ளவாறான சபையின் நிதி நிலைமையை ஐந்தொகையில் வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் காசுப்பாய்ச்சல் அறிக்கையில் 2022 இல் சபையின் காசு உட்பாய்ச்சல் மற்றும் வெளிப்பாய்ச்சல் மூலம் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.


அட்டவணை இல: 1.1

வருடாந்த வரவு, செலவு மற்றும் அரச கொடைகள்

விடயம்°	2018	2019	2020	2021	2022
அரச கொடைகள்	6,000,000.00	6,000,000.00	6,000,000.00	7,200,000.00	7,200,000.00
கிடைக்கப் பெற்ற ஏனைய வருமானங்கள்°	5,996,261.00	9,276,014.50	6,183,476.81	5,633,507.25	12,704,690.61
மொத்த வருமானம்	**11,996,261.00**	**15,276,014.50**	**12,183,476.81**	**12,833,507.25**	**19,904,690.61**

2018 ஆம் ஆண்டு தொடக்கம் 2022 ஆம் ஆண்டு வரையான ஆயுர்வேத வைத்திய சபையின் வரவு செலவு தொடர்பான விபரம் கீழே வரைபு மூலமாக காட்டப்பட்டுள்ளது.

வரைபு இல:1.1



02. கொள்கை வகுத்தமைத்தல்

ஆயுர்வேத வைத்திய சபையினால் நிலையான உப குழுக்களாக கீழ் காணும் குழுக்கள் செயற்படுகின்றது.

I. பரீட்சை கட்டுப்பாட்டுக் குழு
II. தண்டங்கள் தொடர்பான செயற் குழு
III. மேலதிக தகைமைகள் தீர்மானிக்கும் செயற் குழு

பதிவினை எதிர்பார்த்துள்ள பாரம்பரிய ஆயுர்வேத மற்றும் சித்த விண்ணப்பதாரர்களுக்கான நடாத்டப்படுகின்ற எழுத்துப் பரீட்சை 2021.08.10 ஆம் திகதி நடைபெற்ற 21 வது வைத்திய சபையின் 11 வது கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு ஏற்ப கல்வி மற்றும் ஆரோக்கிசாலை சபைக்கு ஒப்படைக்கப்பட்டது. அதற்கு இணங்க கொழும்பு 05, லும்பினி வித்தியாலயத்தில் 2022 பங்குனி மாதம் 12 மற்றும் 13 ஆம் திகதிகளில் நடாத்தப்பட்ட எழுத்துப் பரீட்சையின் இறுதிப் பெறுபேறு 2022.10.10 ஆம் திகதி ஆயுர்வேத வைத்திய சபைக்கு வழங்கப்பட்டுள்ளது.

எழுத்துப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டவர்கள் எண்ணிக்கை 419
எழுத்துப் பரீட்சையில் பங்குபற்றியவர்கள் எண்ணிக்கை 291
எழுத்துப் பரீட்சையில் பங்குபற்றியவர்கள் எண்ணிக்கை 128

ஆயுர்வேத/ சித்த	சர்வாங்க	விசேட	தொகை	மொத்த தொகை
சித்தியடைந்த விண்ணப்பதாரர்கள் எண்ணிக்கை- ஆயுர்வேத சித்தியடைந்த விண்ணப்பதாரர்கள் எண்ணிக்கை- சித்த	31 03	60 04	91 07	98
மீள் பரீட்சை விண்ணப்பதாரர்கள் எண்ணிக்கை- ஆயுர்வேத மீள் பரீட்சை விண்ணப்பதாரர்கள் எண்ணிக்கை- சித்த	15 05	78 04	93 09	102
சித்தியடையாத விண்ணப்பதாரர்கள் எண்ணிக்கை- ஆயுர்வேத சித்தியடையாத விண்ணப்பதாரர்கள் எண்ணிக்கை- சித்த	67 02	18 02	85 04	89
பரீட்சை முறைகேடு காரணமாக பெபேறு நிறுத்தப்பட்டுள்ளவர்கள் எண்ணிக்கை – ஆயுர்வேத	02	-	02	02
தொகை	**125**	**166**	**291**	**291**
சித்தியடைந்த விண்ணப்பதாரர்கள் எண்ணிக்கை-ஆயுர்வேத சித்தியடைந்த விண்ணப்பதாரர்கள் எண்ணிக்கை- சித்த	84 02	40 02	124 04	128
மொத்த தொகை	**211**	**208**	**419**	**419**

பதிவு செய்யப்பட்ட ஆயுர்வேத வைத்தியர்களின் மேலதிக தகைமைகளை தீர்மானித்தலின் பொருட்டான உபகுழு.

1961 இன் 31 இலக்க ஆயுர்வேத சட்டத்தின் 62 வது பிரிவின் நியதிகளின் படி எவரேனும் ஆயுர்வேத வைத்திய சபையில் பதிவு செய்யப்பட்ட பின்னர் தனது தொழில் சார்புற்ற ஏதேனும் மேலதிக தகைமையை சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்டதன் பேரில், ஆயுர்வேத பதிவேட்டில் உள்ளடக்குவதற்கு அதிகாரத்தை கொண்டிருக்கின்றார். அதன்படி அம்மேலதிக தகைமை அவருடைய பெயருடனும் அவரின் தொழில் முயற்சியுடன் சேர்த்து ஈடுபடுத்துவதற்கும், அத்தகைய மேலதிகத் தகைமையின் பொருட்டு சபையினால் வழங்கப்பட்ட சான்றிதழ்

ஒன்றினை வைத்திருப்பதற்கும் சட்ட உரித்தினை அவருக்கு கொடுக்கப்படுகின்றது. ஆயுர்வேத வைத்திய சபையின் தீர்மானத்தின் படியும் இந்த சட்ட திட்டங்களின் ஏற்பாடுகளின் படியும் மேலதிக தகைமைகளினைப் பதிவு செய்தல் ஆரம்பிக்கப்பட்டதுடன், இது தொடர்பாக உரியவர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. 2022 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட 09 வைத்தியர்களின் மேலதிக தகைமைகள் வைத்திய சபையினால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அட்டவணை 2.1

விடயம்	2018	2019	2020	2021	2022
மேலதிக தகைமைகள் உள்ளடக்கப்பட்டு சான்றிதழ்கள் வழங்கப்பட்ட எண்ணிக்கை.	11	09	08	21	09

03. நுண்ணாய்வுகள்°

ஆயுர்வேத வைத்திய சபையில் பதிவு செய்யப்பட்ட வைத்தியர்களின் தொழில்சார் துர்நடத்தைகள் தொடர்பாகவும், பதிவு செய்யப்படாமல் வைத்தியர்களாக செயற்படுவோர் தொடர்பாகவும், கிடைக்கப் பெற்ற முறைப்பாடுகள் விசாரிக்கப்பட்டு சட்ட நடவடிக்கைகள் ஏற்பாடு செய்வதற்காக பொது மக்கள் முறைப்பாடுகள் நுண்ணாய்வுக் கூறு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இந்தக் கூறின் பிரதான நோக்கம் ஆயுர்வேத மருத்துவத்தின் ஒழுங்கீனங்கள், தொழில்சார் துர்நடத்தைகள், ஆயுர்வேத நெறிமுறைகளிற்கு விரோதமாக செயற்படுதல் போன்றவற்றை நுண்ணாய்வு செய்தல். இந்தச் செயற்பாடுகள் செய்தித்தாள் விளம்பர முறைப்பாடுகள், பொது மக்கள் முறைபாடுகள் போன்ற பகுதிகளின் கீழ் நுண்ணாய்வு செய்யப்படுகின்றன. 2021 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட வைத்தியர்கள் 50 பேர் தொடர்பாக புகார்கள் விசாரிக்கப்பட்டு 45 விசாரணைகள் நிறைவடைந்துள்ளதுடன் 2022 ஆண்டில் 25 புகார்கள் கிடைக்கப் பெற்றுள்ளதுடன் அவற்றில் 13 விசாரணை பணிகள் நிறைவடைன்துள்ளன.

அட்டவணை 3.1

விடயம்	2018	2019	2020	2021	2022
நுண்ணாய்விற்காக கிடைக்கப் பெற்ற முறைப்பாடுகளின் எண்ணிக்கை	13	59	100	50	25
நுண்ணாய்வு செய்யப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை	12	49	87	45	13

04. விசேட வைத்திய விசாரணைச் சபைகள்

அரச மற்றும் தனியார் நிறுவனங்களில் பணிபுரிகின்ற உத்தியோகத்தர்களிற்கு, ஆயுர்வேத வைத்தியர்களினால் வழங்கப்படுகின்ற வைத்திய சான்றிதழ்கள் தொடர்பாக தாபன விதிக்கோவையின் xxvi ஆம் அத்தியாயத்தில் 4 ஆம் பிரிவின் படி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் நாடாத்தப்படுகின்ற வைத்திய விசாரணைச் சபையின் இணையாக ஆயுர்வேத வைத்திய சான்றிதழ்கள் தொடர்பாக குறிப்பிடப்பட்ட விசேட வைத்திய விசாரணைச் சபை நடாத்தப்பட்டது. அவை தொடர்பாக அவதானிக்கையில் ஒவ்வொரு நிறுவனத்தின் ஊடாகவும் பொது 142 படிவத்தின் மூலம் நிரப்பி அனுப்பப்படுகின்றது. 2021 ஆம் ஆண்டில் விசேட வைத்திய விசாரணை சபைகள் 05 வைத்திய சபையினால் நடாத்தப்பட்டுள்ளது.

அட்டவணை 4.1

விடயம்	2018	2019	2020	2021	2022
நடாத்தப்பட்ட விசேட வைத்திய விசாரணைகள் எண்ணிக்கை	04	05	03	05	01

2022 ஆம் ஆண்டில் விசேட மருத்துவ சபைக்காக அரச நிறுவனங்கள், திணைக்களங்கள், மற்றும் அமைச்சுக்கள் ஊடாக சமர்ப்பிக்கப்பட்ட நோயாளிகள் 11 பேருக்கு பொது 142 படிவம் இணங்க மருத்துவ சபை அறிக்கை வழங்கப்பட்டுள்ளது.

அட்டவணை 4.2

விசேட மருத்துவ குழு நடாத்தப்பட்ட திகதி	அழைக்கப்பட்ட நோயாளிகள் எண்ணிக்கை	விசேட மருத்துவ குழுவிற்கு சமூகமளித்த நோயாளிகளின் எண்ணிக்கை
2022.03.23	**12**	**11**
மொத்தம்	**12**	**11**

விசேட வைத்திய குழு நடாத்துவதற்கு 2022.01.11 ஆம் திகதி வைத்திய சபைத் தீர்மானத்திற்கு இணங்க 2022.02.14 ஆம் திகதி தொடக்கம் ஆயுர்வேத திணைக்களத்தினால் நாடாத்துவதற்கு ஆயுர்வேத ஆணையாளரிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

05. 1961 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க ஆயுர்வேத சட்டத்தின் 55(1) மற்றும் 55(2) வது பிரிவின் கீழ் ஆயுர்வேத வைத்தியர்களைப் பதிவு செய்தல்:-

ஆயுர்வேத வைத்திய சபை பின்வரும் அடிப்படைக் கோட்பாடுகளினை ஆதாரமாகக் கொண்டு ஆயுர்வேத வைத்தியர்கள் பதிவு செய்யப்படுகின்றனர்

1. அரசு ஏற்றுக் கொண்ட பட்டதாரிகள், டிப்ளோமாதாரிகள் மற்றும் அரசு ஏற்றுக் கொண்ட சான்றிதழ் வைத்திருக்கின்றவர்களை தகைமைக்கு ஏற்ப வைத்தியர்களாகப் பதிவு செய்யப்படல்.
2. தகுதிகளைப் பெற்ற பாரம்பரிய வைத்தியர்கள் ஆயுர்வேத வைத்திய சபையினால் தாபிக்கப்பட்டுள்ள சட்ட திட்டங்களிற்கு அமைய நேர்முகப் பரீட்சையின் பெறுபேறுகள் மற்றும் விதந்துரைப்பின் பேரில் பதிவு செய்யப்படல்.


பரீட்சார்த்திகள் நேர்முகப் பரீட்சையில் பெற்றுக் கொண்ட புள்ளிகளின் அடிப்படையில் தர வரிசைப்படுத்தப்படுவதுடன், இதில் சித்தி அடையத் தவறியவர்கள், அவர்கள் பெற்றுக் கொண்ட புள்ளிகளைக் கருத்திற் கொண்டு மூன்று மாதங்கள், ஆறு மாதங்கள், ஒரு வருடம் என கணிப்பீட்டு காலப் பகுதிக்கு உற்படுத்தி மீளவும் மற்றுமொரு நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

அட்டவணை 5.1

2018 தொடக்கம் 2022 வரை பாரம்பரிய ஆயுர்வேத வைத்தியர்களைப் பதிவு செய்வதற்காக சபையினூடாக நடாத்தப்பட்ட நேர்முகப் பரீட்சைகள் தொடர்பான விபரம்.:-

விடயம்	2018	2019	2020	2021	2022
வருடாந்தம் நடாத்தப்பட்ட நேர்முகப் பரீட்சைகளின் எண்ணிக்கை.	27	34	03	24	27
வருடாந்தம் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்ட விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை.	302	433	37	338	422
வருடாந்தம் நேர்முகப் பரீட்சைக்கு சமூகமளித்த விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை.	235	337	30	281	329
நேர்முகப் பரீட்சையின் ஊடாக பதிவு செய்வதற்கு தகுதி பெற்ற .ண்ணப்பதாரர்களின் எண்ணிக்கைவி	49	94	10	180	136
சித்தி அடைந்தவர்கள் சமூகமளித் தவர்களின் சதவீதமாக	**20.85%**	**27.89%**	**33.33%**	**64.06%**	**41.33%**

வரைபு இல:-5.1




அட்டவணை 5.2

2022 ஆம் ஆண்டில் பாரம்பரிய வைத்தியர்கள் பதிவு செய்வதற்காக சபையின் ஊடாக நடாத்தப்பட்ட வாய்மொழிப் பரீட்சை தொடர்பான மாகாண குறிப்பு

மாகாணம்	வாய்மொழிப் பரீட்சைக் குழு எண்ணிக்கை	அழைக்கப்பட்ட எண்ணிக்கை	சமூகமளித்தோர் எண்ணிக்கை	சித்தியடைந்தோர் எண்ணிக்கை
மத்திய	03	46	37	10
தெற்கு	03	49	38	16
ஊவா	00	00	00	00
மேல்	08	119	77	25
வடக்கு	02	19	17	09
கிழக்கு	04	53	45	20
வடமேல்	03	59	52	34
சப்பரகமுவ	03	60	51	17
வடமத்தி	01	17	12	05
மொத்தம்	27	422	329	136

வரைபு இல:-5.2





2022 ஆம் வருட இறுதிற்கு ஆயுர்வேத வைத்திய சபையில் பதிவு பெற்றுள்ள ஆயுர்வேத வைத்தியர்களின் எண்ணிக்கை 26,650 பேர் ஆகும். இவ் வருடத்தில் 467 பேர் ஆயுர்வேத வைத்தியர்களாகப் பின்வரும் பகுதிகளுக்கு அமைவாக பதிவு செய்யப்பட்டுள்ளனர்

அட்டவணை 5.3

2018 வரை ஆயுர்வேத வைத்திய சபையின் வருடாந்த பதிவு 2தொடக்கம் 202 வைத்தியர்களின் எண்ணிக்கை செய்யப்பட்ட ஆயுர்வேத

விடயம்	2018	2019	2020	2021	2022
பொது (சர்வாங்க)					
பட்டதாரிகள்	**274**	**246**	**250**	**32**	**283**
ஆயுர்வேத வைத்திய மற்றும் சத்திர சிகிச்சைமானி பட்டதாரிகள்- கொழும்பு பல்கலைக்கழகம்	111	107	101	11	146
ஆயுர்வேத வைத்திய மற்றும் சத்திர சிகிச்சைமானி பட்டதாரிகள்- களனி பல்கலைக்கழகம்	94	80	75	04	65
யுனானி வைத்திய மற்றும் சத்திர சிகிச்சைமானி பட்டதாரிகள்- கொழும்பு பல்கலைக்கழகம்	27	15	47	03	35
சித்த வைத்திய மற்றும் சத்திர சிகிச்சைமானி பட்டதாரிகள்- யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் / கிழக்கு பல்கலைக்கழகம்	42	43	27	13	37
ஆயுர்வேத வைத்திய மற்றும் சத்திர சிகிச்சைமானி பட்டதாரிகள்- இந்தியா	-	01	-	01	-
டிப்ளோமாதாரிகள்	**27**	**13**	**01**	**18**	**18**
ஆயுர்வேத சாஸ்திரி	27	10	01	10	05
யாழ்ப்பாண சித்த வித்தியாலயத்தின் இறுதிப் பரீட்சையில் சித்தி	-	03	-	08	13
பாரம்பரியம் - சர்வாங்க	**11**	**19**	**07**	**27**	**47**
பாரம்பரியம்	11	19	07	27	47
பாரம்பரியம் – விசேட	**44**	**74**	**20**	**45**	**119**
பாம்புக்கடி	10	20	06	04	25
முறிவுதறிவு	27	43	13	25	64
கண் நோய்	01	-	-	05	04
சர்ம ரோகம்	-	04	-	04	10
கட்டி புண்	01	02	01	01	05
விசர் நாய்க்கடி	-	-	-	01	-
அக்கினி புண்	-	02	-	02	04

விரணம் (எரிகாயம்)	-	02	-	-	01
மன நோய்	05	01	-	03	06
யானை வைத்தியம்	-	-	-	-	-
முழுத்தொகை (சர்வாங்க/ விசேட)	**356**	**352**	**278**	**122**	**467**

அட்டவணை 5.4

2022.12.31 ஆம் திகதிக்கு ஆயுர்வேத வைத்திய சபையில் பதிவு செய்யப்பட்டுள்ள மொத்த ஆயுர்வேத வைத்தியர்களின் எண்ணிக்கை

விடயம்	2022-12-31 ஆம் திகதிக்கு மொத்த எண்ணிக்கை
(1) .A+B+Cமொத்த பதிவு செய்யப்பட்ட எண்ணிக்கை பொது(சர்வாங்க)	16003
A. பட்டதாரிகள்	**3689**
ஆயுர்வேத வைத்திய மற்றும் சத்திர சிகிச்சைமானி பட்டதாரிகள்- கொழும்பு பல்கலைக்கழகம்	1816
ஆயுர்வேத வைத்திய மற்றும் சத்திர சிகிச்சைமானி பட்டதாரிகள்- களனி பல்கலைக்கழகம்	855
யுனானி வைத்திய மற்றும் சத்திர சிகிச்சைமானி பட்டதாரிகள்- கொழும்பு பல்கலைக்கழகம்	489
சித்த வைத்திய மற்றும் சத்திர சிகிச்சைமானி பட்டதாரிகள்- யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் / கிழக்கு பல்கலைக்கழகம்	518
ஆயுர்வேத வைத்திய மற்றும் சத்திர சிகிச்சைமானி பட்டதாரிகள்- இந்தியா	11
B. டிப்ளோமாதாரிகள்	**5761**
எல்.ஏ.எம்.எஸ் – கல்கடா	95
எவ்.எம்.பீ.எஸ்.- அஹலமாபாத்	04
எம்.எல்.எம். - இந்தியா	01
டீ.ஐ.எம்.எஸ். – சுதேச வைத்திய நிறுவகம் - கொழும்பு	584
டீ.ஏ.எம்.எஸ். - சுதேச வைத்திய நிறுவகம் - கொழும்பு	1299
டீ.எஸ்.ஏ.சீ.- கம்பஹா விக்கிரமாராச்சி வைத்திய நிறுவகம்	1189
டீ.ஏ.எஸ்.சீ.- கம்பஹா விக்கிரமாராச்சி வைத்திய நிறுவகம்	157
எல்.ஏ.எம்.- யாழ்ப்பாணம் சித்த வித்தியாலயம்	91
டீ.எஸ்.ஏ.எம்.எஸ். – கம்பஹா விக்கிரமாராச்சி வைத்திய நிறுவகம்	635
ஆயுர்வேத சாஸ்திரி	1467
யாழ்ப்பாண சித்த வித்தியாலயத்தின் இறுதிப் பரீட்சையில் சித்தி	239
C. பாரம்பரியம் - சர்வாங்க	**6901**
பாரம்பரியம்	6901
(2) மொத்த பதிவு செய்யப்பட்ட எண்ணிக்கை பாரம்பரிய – விசேட	**10299**
பாம்புக்கடி	4049
முறிவுதறிவு	2839
கண் நோய்	750
சர்ம ரோகம்	375
கட்டி புண்	731
விசர் நாய்க்கடி	231
அக்கினி புண்	96
மனநோய்	205
விரணம் (எரிகாயம்)	11
ஏனையன	1012
முழுத் தொகை (சர்வாங்க / விசேட) – 1+2	**26650**
(3) இறந்துள்ள வைத்தியர்களின் எண்ணிக்கை	**3827**

06. ஆயுர்வேத வைத்திய சபையின் வலையமைப்பு

அரச பிரிவைப் போன்று வர்த்தகப் பிரிவுகளில் உள்ளவர்களும் ஆயுர்வேத வைத்தியர்கள் தொடர்பாக விசேட அவதானத்தை செலுத்தியுள்ள இக் கால கட்டத்தில் இப் பணியை இலேசாக்கும் பொருட்டும் ஆயுர்வேத வைத்தியத் துறையின் நலனுக்காக மற்றும் பதிவு செய்யப்பட்ட மற்றும் பதிவினை எதிர்பார்த்துள்ள வைத்தியர்களுக்கான வழிகாட்டல்கள், சட்ட விதிகள், மற்றும் ஏனைய சட்ட திட்டங்கள் அரச பிரிவைப் போன்று வர்த்தகப் பிரிவினரின் அவசியங்களிற்கு ஏற்ப இதனூடாக வெளியிடுவதற்கு ஆலோசிக்கப்பட்டுள்ளது. நாளது வரையாக்கம் செய்யப்பட்ட சகல வைத்தியர்களினதும் விபரங்கள் **www.amc.ayurveda.gov.lk** உத்தியோக பூர்வ வலையமைப்பு இணையதளத்தில் விடுவிக்கப்பட்டுள்ளது. 2009 ஆம் ஆண்டில் வைத்திய சபையின் அனமதியுடன் ஆரம்பிக்கப்பட்ட இவ் இணையதளம் 2010 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 07 அம் திகதி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.



www.amc.ayurveda.gov.lk


07. ஆயுர்வேத வைத்தியர்களின் பதிவினைப் புதுப்பித்தல்

இலக்கம் 1884/36 கொண்ட வர்த்தமானி அறிவித்தலுக்கு இணங்க ஆயுர்வேத வைத்திய சபையில் பதிவினைப் பெற்று 05 வருடங்களைப் பூர்த்தி செய்த வைத்தியர்கள் பதிவினைப் புதுப்பித்தல் வேண்டும். உரிய திகதிக்கு பதிவினை புதுப்பிக்க தவறுமிடத்து அவ் வைத்தியர்கள் வருடாந்த தாமதக் கட்டணத்திற்கு உள்ளடக்கப்படுவர்.

அட்டவணை இல. 7.1

விடயம்		2017	2018	2019	2020	2021	2022
பதிவினைப் புதுப்பித்துள்ள வைத்தியர்களின் எண்ணிக்கை	சர்வாங்க	439	313	607	697	360	542
	விசேட	127	161	205	554	222	195

வரைபு இல. 7.1



08. ஆயுர்வேத வைத்திய சபையின் மனித வளம்

ஆயுர்வேத வைத்திய சபையின் அங்கீகரிக்கப்பட்ட படவியணியினர் தொடர்பான விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

பதவிகள்	அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர்	2022-12-31 ஆம் திகதிக்கு சேவையில் உள்ள பதிவியணியினர்
பதிவாளர் (ஒப்பந்த அடிப்படை)	**01**	**01**
முகாமைத்துவ உதவியாளர்	**11**	**11**
ஆவணப் பொறுப்பாளர்	**01**	**00**
அலுவலக அலுவல்கள் உதவியாளர்	**01**	**01**
அலுவலக ஊழியர்	**02**	**01**
மொத்தம்	**16**	**14**

09. 2022 ஆம் ஆண்டில் ஆயுர்வேத வைத்திய சபையினால் எடுக்கப்பட்ட மற்றும் கொண்டு வரப்பட்ட தீர்மானங்களுக்கு இணங்க நடைமுறைப்படுத்தப்பட்ட ஏனைய நடவடிக்கைகள்

09.1 அரச மற்றும் தனியார் நிறுவனங்களில் பணிபுரியும் உத்தியோகத்தர்களிற்கு ஆயுர்வேத வைத்தியர்களினால் வழங்கப்படுகின்ற வைத்திய சான்றிதழ்கள் உறுதி செய்தல்.

விபரம்	2018	2019	2020	2021	2022
உறுதி செய்யப்பட்ட வைத்திய சான்றிதழ்களின் எண்ணிக்கை	**738**	**627**	**430**	**512**	**353**

ஒவ்வொரு அரச நிறுவனங்களில் கணக்காய்வு விசாரணையின் ஊடாக வழங்கப்பட்டுள்ள விபரங்களுக்கு இணங்க பொய்யான வைத்திய சான்றிதழ்கள் வழங்கிய சந்தேகத்திற்கு இடமான வைத்தியர்களுக்கு 14 நாட்களுக்கு முன் வைத்திய சபைக்கு காரணங்களை சமர்ப்பிற்குமாறு கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. அதற்கு இணங்க எவ்வித பதிலும் அனுப்பத் தவறிய வைத்தியர்களின் வைத்திய சான்றிதழ்கள் ஏற்றுக்கொள்ள மறுக்கப்பட்டு குறிப்பிட்ட நிறுவனங்களை அறிவூட்டுவதற்கு மேற்கொண்டு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. அதன் மூலம் போலியான வைத்திய சான்றிதழ்கள் வழங்குவதை குறைத்துக்கொள்ள முடிந்துள்ளது.

இந்த உறுதிப்பாடுகள் பெரும்பாலும் மிகவும் தொலைதூர பிரதேசங்களிலிருந்து வரும் நோயாளர்கள் இவ் உறுதி செய்துகொள்வதற்காக நாவின்ன ஆயுர்வேத வைத்திய சபைக் காரியாலயத்திற்கு வருகின்றமையினால் அவர்கள் பல சிரமங்களிற்கு ஆளாவதால் 2022-.09.06 ஆம் திகதி வைத்திய சபைத்

தீர்மானத்திற்கு இணங்க 2022-10.01 ஆம் தொடக்கம் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்படுகின்ற வைத்திய சான்றிதழ்கள் தவிர்ந்த ஏனைய சகல வைத்திய சான்றிதழ்கள் மாகாண ஆயுர்வேத ஆணையாளர் ஊடாக மாகாண ஆயுர்வேத வைத்தியசாலைகளின் பணிப்பாளர்களிற்கும் மற்றும் மாவட்ட தள வைத்தியசாலைகளின் விடயப் பொறுப்பதிகாரிற்கும் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

09.2. பதிவு செய்யப்பட்ட ஆயுர்வேத வைத்தியர்களுக்கான அடையாள அட்டை வழங்கல் .

விபரம்	2018	2019	2020	2021	2022
பதிவு செய்யப்பட்ட ஆயுர்வேத வைத்தியர்களுக்கு அடையாள அட்டை விநியோகித்தல்.	**490**	**641**	**405**	**105**	**571**

09.3. பதிவு செய்யப்பட்ட ஆயுர்வேத வைத்தியர்களுக்கான வாகனச் சின்னம் வழங்கல்

விபரம்	2018	2019	2020	2021	2022
பதிவு செய்யப்பட்ட ஆயுர்வேத வைத்தியர்களுக்கு வாகனச் சின்னம் வழங்கல்.	**126**	**122**	**107**	**78**	**106**

09.4. பதிவு செய்யப்பட்ட ஆயுர்வேத வைத்தியர்களுக்கான வைத்திய சான்றிதழ் புத்தகங்கள் வழங்கல்

விபரம்	2018	2019	2020	2021	2022
விநியோகிக்கப்பட்ட வைத்திய சான்றிதழ் புத்தகங்கள் எண்ணிக்கை	1398	1584	845	821	1544

மேற் குறிப்பிடப்பட்ட விடயங்களிற்கு ஆயுர்வேத வைத்திய சபை 2022 ஆம் ஆண்டினுள் அதன் குறிக்கோளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தது என்பதை நான் இச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். கொவிட் 19 தொற்றிற்கு மத்தியில் ஆயுர்வேத வைத்திய சபையின் பணிகள் நிறைவேற்ற முடியாத செயற்பாடுகள் 2023 ஆம் ஆண்டில் நிறைவேற்றிக்கொள்ள கூடிய வகையில் அடிப்படை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்பதை மேலும் குறிப்பிடுகிறேன்.

கலாநிதி எம்.டீ.ஜே.அபேகுணவர்தன
ஆயுர்வேத ஆணையாளரும்
ஆயுர்வேத வைத்திய சபைத் தலைவரும்.

2022-02-14 ஆம் திகதி
மகரகம,
நாவின்ன, பழைய கொட்டாவ வீதியில்,
ஆயுர்வேத வைத்திய சபை அலுவலகத்தில்.

ஆயுர்வேத வைத்திய சபை

2022.12.31 திகதியில் முடிவுற்ற ஆண்டின் பொருட்டான நிதி செயற்திறன் கூற்று

விபரம்	2021-12.31	2022-12.31
	ரூபா	ரூபா
வருமானம்		
01. அரசாங்க ஒதுக்கீடுகள்	7,200,000.00	7,200,000.00
02. வைத்தியளைப் பதிவு செய்வதற்கான கட்டணம் - (குறிப்பு 01)	5,175,498.00	12,363,425.00
03. நிதி வருமானம் - (குறிப்பு 02)	293,749.25	317,905.61
04. ஏனைய வருமானங்கள் - (குறிப்பு 03)	164,260.00	23,360.00
05. மொத்த வருமானம் (01+02+03+04)	**12,833,507.25**	**19,904,690.61**
செலவுகள்		
06. செயற்பாட்டுச் செலவு – (குறிப்பு 04)	2,486,408.60	4,420,509.82
07. நிறுவன மற்றும் நிர்வாகச் செலவு - (குறிப்பு 05)	10,107,217.61	12,053,240.95
08. ஏனைய செலவுகள் - (குறிப்பு 06)	125,023.00	135,777.00
09. மொத்த செலவு - (06+07+08)	**12,728,649.21**	**16,609,527.77**
வருடாந்த குறை / மிகை (05-09)	**104,858.04**	**3,295,162.84**
(குறிப்பு 07)		

மேலே தயாரிக்கப்பட்ட கணக்குக் கூற்று அரச கணக்கீட்டு கொள்கைகளிற்கு இணங்க சரியெனவும் மற்றும் அதற்கான கணக்கு வைப்புச் சரியாக வைக்கப்பட்டுள்ளது எனவும் அத்தாட்சிப்படுத்துகிறேன.

தயாரித்தவர்:
பிரபாத் குணசேகர
முகாமைத்துவ உதவியாளர்
ஆயுர்வேத வைத்திய சபை

செவ்வை பார்த்தவர்:
ஏ.எம்.எம்.கே.அபேசிங்க
பிரதான கணக்காளர்
ஆயுவேத திணைக்களம்

வைத்தியர் எச்.பீ.கே..அஜித் குமார
பதிவாளர்,
ஆயுர்வேத வைத்திய சபை

கலாநிதி எம்.டீ.ஜே. அபேகுணவர்தன
ஆயுர்வேத வைத்திய சபைத் தலைவரும்
ஆயுர்வேத ஆணையாளரும்

குறிப்பு 01 செயற்பாட்டு வருமானம்

விபரம்	2021.12.31 ரூபா	2022.12.31 ரூபா
மேலதிக தகைமைகள் உள்ளடக்கல் மூலமான வருமானம்	96,000.00	31,500.00
பதிவு விண்ணப்பப்படிவங்கள் வழங்குவதன் மூலமான வருமானம்	1,504,250.00	1,983,500.00
நற்சான்றிதழ்	-	98,000.00
எழுத்துப் பரீட்சைக் கட்டணம்	-	1,468,150.00
மருத்துவச் சான்றிதழ் உறுதி செய்தல் மூலமான வருமானம்	143,500.00	102,500.00
சான்றிதழ் பிரதிகள் வழங்குவதன் மூலமான வருமானம்	117,000.00	222,000.00
பெயர் மாற்றம் மூலமான கட்டணம்	33,000.00	81,000.00
மருத்துவச் சான்றிதழ் புத்தகங்கள் வழங்குவதன் மூலமான வருமானம்	328,400.00	617,600.00
வாகன இலட்சிணை வழங்குவதன் மூலமான வருமானம்	225,600.00	318,000.00
வைத்திய அடையாள அட்டை வழங்குவதன் மூலமான வருமானம்	197,100.00	1,155,500.00
நேர்முகப் பரீட்சைக் கட்டண வருமானம்	446,650.00	1,042,100.00
பெயர் ஏட்டு பிரதிக் கட்டணம்	375.00	11,025.00
தபாற் கட்டண வருமானம்	28,673.00	121,000.00
பதிவு இலக்கம் உறுதி செய்தல் வருமானம்	4,000.00	9,500.00
பதிவுக் கட்டண வருமானம்	793,500.00	3,195,000.00
பதிவினை புதுப்பித்தல் வருமானம்	895,050.00	1,628,600.00
பாடவிதானம் வழங்குவதன் மூலமான வருமானம்	84,900.00	94,200.00
விசேட மருத்துவக் குழு வருமானம்	269,000.00	119,000.00
சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகள் வழங்குவதன் மூலமான வருமானம்	8,500.00	65,250.00
	5,175,498.00	**12,363,425.00**

குறிப்பு 02 – நிதி வருமானம்

விபரம்	2021.12.31 ரூபா	2022.12.31 ரூபா
பணிக்கொடைக் கொடுப்பனவு முதலீட்டு வட்டி வருமானம்	212,736.04	229,357.98
பதவியணியினர் கடன் வட்டி வருமானம்	81,013.21	88,547.63
	293,749.25	**317,905.61**

குறிப்பு 03– நானாவித வருமானம்

விபரம்	2021.12.31 ரூபா	2022.12.31 ரூபா
கணக்காய்வுக் கட்டண மேலதிக ஒதுக்கீடு	155,460.00	
நானாவித வருமானம்	8,800.00	23,360.00
	164,260.00	**23,360.00**

குறிப்பு 04 – செயற்பாட்டுச் செலவு

விபரம்	2021.12.31 ரூபா	2022.12.31 ரூபா
செய்தித்தாள் விளம்பரக் கட்டணம்	266,058.00	-
ஆயுர்வேத வைத்திய சபைக் கூட்டங்கள் பொருட்டான கட்டணம்	614,200.00	1,024,400.00
உபகுழுக்கள் கட்டணங்கள்	108,000.00	91,200.00
உபசரிப்புச் செலவு	125,447.48	218,368.60
கூலி வாகன மற்றும் எரிெபாருள் கட்டணம்	106,867.33	280,856.00
வைத்திய அடையாள அட்டை தயாரிப்புக் கட்டணம்	14,700.00	93,620.00
நேர்முகப் பரீட்சைக் குழுக் கட்டணம்	312,000.00	368,450.00
தபாற் கட்டணம்	184,725.00	336,390.00
அச்சிடும் கட்டணம்	282,899.40	467,031.60
காகிதாதிகள் செலவு	371,301.39	750,254.37
பயணச் செலவு	94,410.00	101,113.00
எழுத்துப் பரீட்சைக்கான கட்டணம்	5,800.00	681,586.25
வாகன பராமரிப்புச் செலவு	-	7,240.00
	2,486,408.60	**4,420,509.82**

குறிப்பு 05 – நிறுவன மற்றும் நிர்வாகச் செலவு

விபரம்	2021.12.31 ரூபா	2022.12.31 ரூபா
பதவியணியினர் சம்பளம்	6,392,352.92	7,385,211.99
பதவியணியினர் கொடுப்பனவு	264,400.00	706,800.00
தலைவர் கொடுப்பனவு	-	75,000.00
பதிவாளர் கொடுப்பனவு	484,680.00	597,750.00
கணக்காளர் கொடுப்பனவு	120,000.00	120,000.00
மேலதிக நேரக் கொடுப்பனவுக் கட்டணம்	144,697.17	109,737.28
ஊழியர் சேமலாப நிதியம் கட்டணம்	955,136.50	990,093.25
ஊழியர் நம்பிக்கை கொடுப்பனவு நிதியக் கட்டணம்	191,027.30	198,018.65
வருடாந்த பணிக் கொடைக் கொடுப்பனவுக் கட்டணம்	145,030.00	274,510.00
காரியாலய உபகரணக்கள் திருத்தக் கட்டணம்	152,047.50	290,725.84
சுகாதார சேவைகள் கட்டணம்	224,394.41	229,016.41
புகையிரத பருவ கால உத்தரவுச் சீட்டுக் கட்டணம்	-	27,150.00
விடுமுறைக்கான புகையிரத ஆ ணைப்பத்திரக் கட்டணம்	-	2,000.00
செய்தித்தாள் கட்டணம்	25,780.00	12,020.00
தொலைபேசிச் செலவு	77,183.36	106,243.01
காப்புறுதிக் கட்டணம்	7,982.70	7,496.33
வருடாந்த கணக்காய்வுக் கட்டணம்	321,000.00	335,000.00
நீர்க் கட்டணம்	16,435.00	11,917.00
காரிாயல உபகரணங்கள் வருடாந்த தேய்வுக் கணக்கு	363,719.62	295,801.78
வாகன வருடாந்த தேய்வுக் கணக்கு	79,791.93	62,237.71
மின்சாரக் கட்டணம்	151,559.20	216,511.70
	10,117,217.61	**12,053,240.95**

குறிப்பு 06- ஏனைய செலவுகள்

விபரம்	2021.12.31 ரூபா	2022.12.31 ரூபா
நானாவிதச் செலவுகள்	125,023.00	135,777.00
	125,023.00	**135,777.00**

குறிப்பு 07 – கூற்று மேலதிகம் திருத்தம்

2021 ஆம் ஆண்டில் கூற்று மேலதிகம்	**115,858.04**
2021 ஆம் ஆண்டின் கணக்காய்வு ஒதுக்கீடு	-11000.00
2021 ஆம் ஆண்டில் திருத்த மேலதிகம்	**104,858.04**

ஆயுர்வேத வைத்திய சபை
2022.12.31 திகதிக்கு நிதி உள்ளவாறான கூற்று

விபரம்	2021.12.31		2022.12.31	
	ரூபா		ரூபா	
சொத்து				
நடைமுறைச் சொத்து				
காசு மீதி	3,117,410.05		6,900,348.70	
பதவியணியினர் கடன்	2,093,000.00		2,196,000.00	
முற் கொடுப்பனவு செலுத்தல்			96,485.00	
வைத்திய சான்றிதழ் புத்தகத் தொகைக் கணக்கு	523,992.00		336,318.80	
காகிதாதிகள் கையிருப்பு	393,822.94		384,279.87	
தபால் முத்திரை கையிருப்பு	16,565.00		55,175.00	
எதிர்வரும் ஆண்டிற்கான கொடுப்பனவுகள் - **குறிப்பு 01**	44,456.23		44,354.44	
		6,189,246.22		10,012,961.81
நடைமுறையில்லாத சொத்து				
ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணம் (கொள்விலை)	6,979,238.17		6,979,238.17	
திறண்ட பெறுமானத் தேய்வு	(5,237,242.09)		(5,533,043.87)	
ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணம் (தேறிய பெறுமதி)		1,741,996.08		1,446,194.30
வாகனக் கணக்கு	764,280.00		764,280.00	
வாகன தேய்வு ஒதுக்கீட்டுக் கணக்கு	(481,381.33)		(543,619.04)	
வாகனத் தேய்வு (தேறிய பெறுமானம்)		282,898.67		220,660.96
பணிக்கொடை கொடுப்பனவு முதலீடு		4,170,145.00		4,444,655.00
மொத்தச் சொத்து		**12,384,285.97**		**16,124,472.07**
பொறுப்புகள்				
நடைமுறை பொறுப்புக்கள்				
கணக்காய்வுக் கட்டணம் ஒதுக்கீட்டுக் கணக்கு	321,000.00		335,000.00	
அட்டுற்ற தபாற் கட்டணம்	400.00		200.00	
அட்டுற்ற வாகன இலட்சிணைக் கட்டணம்	6,000.00		6,000.00	
செலுத்டப்பட வேண்டிய எழுத்துப் பரீட்சைக் கட்டணம்			5,500.00	
செலுத்டப்பட வேண்டிய சுகாதார சேவைகள் கட்டணம்			1,220.44	
திரட்டப்பட்ட கொடுப்பனவு- குறிப்பு 02	60,820.56		141,063.38	
எதிர்வரும் ஆண்டிற்கான வருமானம் குறிப்பு 03	1,660,450.00		1,730,200.00	
		2,048,670.56		2,219,183.82
நடைமுறையில்லாத பொறுப்புக்கள்				
பணிக்கொடைக் கொடுப்பனவு ஒதுக்கீடு		4,170,145.00		4,444,655.00
மொத்த பொறுப்புக்கள்		**6,218,815.56**		**6,663,838.82**
தேறிய சொத்து		**6,165,470.41**		**9,460,633.25**

தேறிய உரிமையாண்மைகளும் பொறுப்புக்களும்			
மூலதன மற்றும் ஒதுக்கம்		6,060,612.37	6,165,470.41
குறைக்கப்பட்டது / கூட்டப்பட்டது திரண்ட குறை / மிகை	**(குறிப்பு 04)**	104,858.04	3,295,162.84
மொத்த தேறிய உரிமையாண்மைகளும் பொறுப்புக்களும்		**6,165,470.41**	**9,460,633.25**

குறிப்பு 01 - எதிர்வரும் ஆண்டிற்கான கொடுப்பனவுகள்	**2021.12.31**	**2022.12.31**
எதிர்வரும் ஆண்டிற்கான காப்புறுதிக் கட்டணம்	2,606.23	12,966.98
எதிர்வரும் ஆண்டிற்கான நானாவித செலவுகள்	41,850.00	31,387.46
	44,456.23	**44,354.44**

குறிப்பு 02 - திரட்டப்பட்ட கொடுப்பனவு	**2021.12.31**	**2022.12.31**
